# அனுபவங்களில் இருந்து சமகால ஆற்றுகைக்கான பனுவலிக்கு மை நேம் இஸ் தமிழ் ஆற்றுகையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

**யோண் மரியதாஸ் கிருதர்ஷன் நீக்கிலஸ்**
*நாடகமும் அரங்கக் கலைகளும் துறை, SPRFVPA, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்.**

*இலங்கைத் தமிழர்கள் நாற்பது வருடகாலப் போர் வரலாற்றையும் அனுபவங்களையும் தாங்கியிருக்கின்ற ஒரு இனம். அதிகாரத்தின் எல்லைக்குள்ளிருந்து அடக்குமுறையைப் பற்றிப் பேசுவது என்பது எப்போதும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவே இருக்கிறது. இந்த நிலையில் அந்த அனுபவங்களை எப்படி அரங்குக்கு அல்லது ஆற்றுகைகளுக்குக் கொண்டுவருவது என்ற ஆய்வுப் பிரச்சனையிலிருந்து ஆரம்பமாகும் இவ் ஆய்வானது சுவிஸ்லாந்து, பாசில் நகர சர்வதேச அரங்க விழா 2022லும், ஜெர்மனி ஸ்பீல் ஆர்ட் சர்வதேச அரங்க விழாவிலும் ஆற்றுகை செய்யப்பட்ட “மை நேம் இஸ் தமிழ்” எனும் ஆற்றுகையின் பனுவலையும் அவ் பனுவலின் தயாரிப்புப் படிமுறையையும் அடிப்டையாகக் கொண்டது. புலத்தில் நிகழ்ந்தது, புலப்பெயர்வில் நிகழ்ந்தது, முதல் தலைமுறையில் தமிழ் தொடர்புள்ளோருக்கு நிகழ்ந்தது ஆகிய மூன்று அனுபவங்களைத் தொகுக்கும் இப் பனுவல் தமிழ், அதிகாரம், அடையாளம், பயங்கரவாதம் பற்றிப் பேசுகிறது. மூன்று நபர்களின் தமிழோடான சொந்த அனுபவங்களைத் தொகுத்து மலேசியாவைச் சேர்ந்த லியோ புய் டின் ஆற்றுகை பனுவலாக வடிவமைத்துள்ளார். “திகம் திகம்” என்னும் பனுவல் தயாரிப்பு படிமுறையைப் பயன்படுத்தும் இவர் உண்மையை வளைத்தல் என்னும் நுட்பத்தையும் கால வரிசைக் கோட்டோடு விளையாடுதலையும் ஒத்த மற்றும் எதிர் உணர்வுநிலையிலுள்ள சம்பவங்களை வரிசைப் படுத்துதல் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்துகிறார். பனுவலின் சக்தி அல்லது பனுவல் பெறுகின்ற முக்கியத்துவம் பற்றிய இவ் ஆய்வானது பண்புசார் ஆய்வு முறையியலைப் பயன்படுத்துவதோடு கட்டமைப்புப் பகுப்பாய்வு, பிரதிபலிப்பாக்கம் மற்றும் நிலைநிறுத்துதல் போன்ற ஆய்வு அணுகுமுறைகள் பயன்படுத்தி ஆய்வு செய்யப்படுகிறது. 2022ம் ஆண்டில் தனிமொழிகளை மட்டும் வரிசைப்படுத்துவதாக அமைந்த பனுவல் 2023ம் ஆண்டில் தனிமொழிகளையும் உரையாடல்களையும் உள்ளடக்கியதாக மேம்படுத்தப்பட்டதால் இவ் இரு பனுவல்களுக்கு இடையேயான பொதுமைகள், பரிமாணமாறுபாடுகள், முன்னேற்றங்கள் பற்றியும் உரையாடுகிறது. பனுவலுக்கூடாக ஒரு எழுதப்படாத வரலாற்றினை எழுதுவதற்கும், ஒடுக்கப்படுகின்ற அல்லது சிறுபான்மை இனக்குழுக்கள் தாங்கள் பேச விரும்புகின்ற விடயங்களைப் பேசுவதற்கும், பனுவலுக்கான முக்கியத்துவத்தை அதிகரிப்பதற்கும் பயன் தருவதாக இவ் ஆய்வு அமையும்.*

**திறவுச் சொற்கள்** - *ஆற்றுகைப் பனுவல், திகம் திகம், பரிமாண மாறுபாடுகள், உண்மையை வளைத்தல்*